

உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் தமிழ்நாடு அரசின் 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை ஆகிய துறைகளின் சார்பில் மானியக் கோரிக்கை நடைபெறவுள்ளதையொட்டி, நேற்று (24.04.2025) சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### திராவிட மாடல் அரசின் சார்பில் –

# வாசிப்புப் பழக்கத்தை தீவிரமாக ஊக்குவித்து வருகிறோம்!

## உலகப் புத்தக நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்தி!

சென்னை, ஏப். 25 –

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உலகப் புத்தக நாளையொட்டி வெளியிட்டுள்ள செய்தியில், வாசிப்புப் பழக்கத்தை தீவிரமாக திராவிட மாடல் அரசின் சார்பில் ஊக்குவித்து வருகிறோம் என்று குறிப்பிட்டார்.

உலக புத்தக நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**புத்தகங்கள் புதிய உலகிற்கான திறவுகோல்கள். நாம் வாழ்ந்து பார்க்காத வாழ்க்கை, நாம் சந்திக்காத மனிதர்கள், நாம் பார்த்திராத காலம் என அனைத்தையும் நமக்கு அறிமுகப்படுத்தும் நல்ல நண்பன்தான் புத்தகங்கள்.**

**அதனால்தான், சென்னை, மதுரையைத் தொடர்ந்து கோவை, திருச்சியிலும் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் பெயரில் மாபெரும் நூலகங்களை எழுப்பி வருகிறோம்.**

**மாவட்டந்தோறும் புத்தகக் காட்சிகள், இலக்கியத் திருவிழாக்கள், சொற்பொழிவுகள் என வாசிப்புப் பழக்கத்தைத் தீவிரமாக நமது திராவிட மாடல் அரசின் சார்பில் ஊக்குவித்து வருகிறோம்.**

**"புத்தகத்தில் உலகைப் படித்தால் அறிவு செழிக்கும்; உலகத்தையே புத்தகமாய்ப் படித்தால் அனுபவம் தழைக்கும்!"**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### பெரம்பலூர் நகர கழகம் சார்பில், நகரச் செயலாளர் எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. தலைமையில்,

# முதலமைச்சர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா.எம்.பி. சிறப்புரை! வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஏப்.25-

பெரம்பலூர் நகர கழகம் சார்பில், கழகத்தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் 72ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், பெரம்பலூர் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெற்றது

பெரம்பலூர் நகர கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் தலைமையில், 6 ஆவது வார்டு கழகச் செயலாளர் ஜே.எஸ்.ஆர்.கருணாநிதி வரவேற்புரையில், நகர அவைத்தலைவர் கோ.ரெங்கராஜ், நகர துணைச் செயலாளர்கள் நூ.சபியுல்லா, ஆர்.ரெங்கநாதன், கல்பனா முத்துக்குமார், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.ஆர். ராஜேந்திரன், கே.அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், கழக துணைப் பொதுச்செயலாளர் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் மாநிலங்களவை கழக குழுத் தலைவர் திருச்சி என்.சிவா.எம்.பி., பங்கேற்று பேசுகையில், தி.மு.க. கடந்து வந்த பாதைகள் மற்றும் காலை உணவுத் திட்டம், மகளிர் உதவித் தொகை இலவச பேருந்து பயணம், புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட தி.முக .அரசு வெற்றிகரமாக செயல்படுத்திக் கொண்டிருக்கக் கூடிய திட்டங்கள், அதன் பயன்கள் குறித்தும், இன்னும் 11 மாதங்களில் நாம் தேர்தலை சந்திக்க உள்ளதாகவும் அதற்கு முன்னதாக மக்களாகிய நீங்கள் அரசின் திட்டங்கள் குறித்து தெரிந்து கொண்டு இதற்கு மேலும் தொடர்ந்து பயன்கள் பெற எப்போதும் தி.மு.க.வுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், செ.அண்ணாதுரை, பட்டுச் செல்வி ராஜேந்திரன், ஆர்.முருகேசன், அழகு.நீலமேகம், மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை சி.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவி ச்சந்திரன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் என்.கிருஷ்ண மூர்த்தி, எம்.ராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன்,

ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன் (எ) ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் கே.ஜி. மாரிக்கண்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அ.அப்துல்கரீம், டி.ஆர்.சிவசங்கர், வ.சுப்ரமணியன், ஆர். அருண், மா.பிரபாகரன், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ) அப்துல்பாரூக், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கவிஞர்.முத்தரசன், துணை அமைப்பாளர் கோவிந்தராஜன், மாவட்ட கலை இலக்கிய பேரவை அமைப்பாளர் ஆர்.சுந்தர்ராஜ், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், அரும்பாவூர் பேரூர் கழகச் செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழகச் செயலாளர் செல்வ லெட்சுமி சேகர், லெப்பைக்குடிக்காடு பேரூர் கழக செயலாளர் ஏ.ஏஸ்.ஜாகிர்உசேன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார்,

மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நகர கழக பொருளாளர் முகமது அசாருதீன் நன்றியுரையாற்றினார்.



திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி சார்பில், இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம், திருப்பூர், கருவம்பாளையம் பகுதி 43வது வார்டுக்குட்பட்ட ஏ.பி.டி. சாலை பகுதிகளில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், வடக்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ், தெற்கு மாநகர மாணவர் அணி அமைப்பாளர் விஜய சிம்மராஜா ஆகியோர் முன்னிலையில் கழக மாணவர் அணி செயலாளர், வழக்கறிஞர் ராஜீவ் காந்தி நீட் தேர்வுக்கு எதிரான விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு வழங்கி இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார்.இதில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், க.அசோக்குமார், ஆர்.என். டி.விவேக், த.சசிக்குமார், ம.அசோக்குமார், பாரப்பாளையம் சிவா, செல்வக்குமார், சுரேஷ்குமார், கௌதம் சிவக்குமார், பிரேம் நாத், பி.கே.கணேஷ், எஸ்.ஆர்.ரமேஷ், மு.நந்தகோபால், சாம் கிஷோர், சேக், சந்துரு உள்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மூலனூர் பேரூராட்சி 15வது வார்டுக்குட்பட்ட ஜே.ஜே.நகர் பகுதியில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த குமார் தலைமையில் 200க்கும் மேற்பட்டோர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணை செயலாளர், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் க.செல்வராஜ், மூலனூர் மேற்கு ஒன்றிய செயலாளர் துரை. தமிழரசு, பேரூர் செயலாளர், பேரூராட்சி தலைவர் மக்கள் க.தண்டபாணி, துணைத் தலைவர் அ.பழனிச்சாமி, வார்டு செயலாளர்கள் எஸ்.கே.பழனிச்சாமி, கன்னிமார் செல்வராஜ், இரா.செந்தில்குமார், அருண்மொழி பாண்டியன், பிரஸ். மனோகரன் உள்பட பலர் உள்ளனர்.

### நாமக்கல் மேற்கு மாவட்டத்தில் இளைஞர் அணிக்கு கிளைகள் தோறும் பொறுப்பாளர் நியமிப்பீர்!

# மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்துவீர்!

## மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! கே.எஸ். மூர்த்தி அறிவுறுத்தல்!

நாமக்கல், ஏப். 25-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள கொங்கு சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் இரா. நடன சபாபதி தலைமை தாங்கினார். நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளரும், பரமத்தி வேலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி கூட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கிப் பேசிய போது கூறியதாவது,



தமிழ்நாட்டின் துணை முதல்வரும், திமுக மாநில இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படி ஒவ்வொரு கிளைகளிலும் இளைஞர் அணி துவக்க நகர, பேரூர், ஒன்றிய கழக நிர்வாகிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாணவர் அணிக்கு உறுப்பினர் சேர்க்கை விரைவில் நடத்த வேண்டும் வீடு வீடாகச் சென்று மாணவர்களை மாணவர் அணியில் இணைக்கும் பணியினை பகுதி கழகச் செயலாளர்கள் மேற்கொள்ள வேண்டும். ஒவ்வொரு நகர, ஒன்றிய, பேரூர் கழகங்களில் சார்பு அணி நிர்வாகிகள் நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொது மக்களிடம் நேரடியாக நமக்கு தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நீர்மோர் பந்தல்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டும். தினசரி நீர்மோர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அனைத்து நிர்வாகிகளையும் கேட்டுக் கொள்கிறேன் என கூறினார்.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரங்கசாமி, இந்திராணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மயில்சாமி, சாந்தி ,

நகர செயலாளர்கள் திருச்செங்கோடு கார்த்திகேயன், பள்ளிபாளையம் குமார், குமாரபாளையம் விஜய் கண்ணன், குமாரபாளையம் ஞானசேகரன், ஒன்றிய செயலாளர்கள் தனராசு, கே கே சண்முகம், வட்டூர் ஜி தங்கவேல், செல்வராஜ், ஏ பி ஆர் சண்முகம், பழனிவேல், நாச்சிமுத்து, இளங்கோவன், செல்வம், பேரூர் செயலாளர்கள் ரமேஷ், முருகன், திருமலை, கார்த்திக் ராஜா, கருணாநிதி, மாவட்ட இளைஞரணி செயலாளர் பாலாஜி துணை செயலாளர்கள் பூக்கடை சுந்தர், நவலடி ராஜா, கார்த்திகேயன், முரளி / திருச்செங்கோடு நகர இளைஞரணி செயலாளர் செங்கோட்டுவேல் ஆகியோர் உள்ளிட்ட மகளிர் அணி சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர்

# ஆடுதுறை மு.உத்திராபதி மூத்த சகோதரர் மு.குப்புசாமி மறைவு!

தஞ்சை ஏப்.25-

மாநில இலக்கிய அணி துணைச் செயலாளரும், கும்பகோணம் நீதிமன்ற அரசு வழக்கறிஞருமான வழக்கறிஞர் ஆடுதுறை மு.உத்திராபதி, மு.நாகலிங்கம் ஆகியோரின் சகோதரர் மு.குப்புசாமி (வயது 62) உடல்நலக்குறைவின் காரணமாக நேற்று 24.04.2025 அதிகாலை 5 மணிக்கு மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைந்த மு.குப்புசாமி அவர்களுக்கு குணசுந்தரி என்ற மனைவியும், கார்த்திகேயன் என்ற மகனும் உள்ளனர்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்த கழக நிர்வாகிகள் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இன்று (25.04.2025) காலை 09.00 மணிக்கு அவரது சொந்த ஊரான ஆடுதுறை, மேல செட்டித்தெருவில் நல்லடக்கம் செய்யப்படுகிறது.




ரோம் நகர் வாடிகனில் நடைபெறும் கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ எஸ். இருதயராஜ் ஆகியோர் கலந்து கொள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு அவர்கள் புறப்பட்டார்கள்.



கோவை மாவட்டம், பொள்ளாச்சி மகாலிங்கபுரத்தில் பொள்ளாச்சி நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடம் கட்டும் பணியினை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.கண்ணப்பன் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி முன்னிலையில் கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் பொள்ளாச்சி நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன், நகராட்சி ஆணையாளர் கணேசன், சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் தென்றல் செல்வராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.க.முத்து, அமுதபாரதி, ஒன்றியச் செயலாளர்கள் ஓ.வி.எஸ்.தேவசேனாதிபதி, டி.யுவராஜ், எஸ்.என்.காணியப்பன், ஜி.கதிர்வேல், யுவராஜ், பேரூர் செயலாளர்கள் ஆறுச்சாமி, மருத்துவர் ஏ.பி.செந்தில்குமார், கே.காளிமுத்து, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சபரி கார்த்திகேயன், துணை அமைப்பாளர் மணிமாறன், நகர்மன்ற துணைத்தலைவர் கவுதமன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.